## பினாங்கில் நீர் டாக்சி சேவை பரிந்துரைகள்
# வரவேற்கப்படுகின்றன

ஜார்ஜ்டவுன், டிச. 10-

பினாங்குத் தீவில் பொதுப் போக்குவரத்துச் சேவையாக நீர் டாக்சி சேவையை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகளை அம்மாநில அரசு வரவேற்கிறது. நீர் டாக்சி சேவையை வழங்க மாநில அரசும் பினாங்குத் தீவு மாநகர் மன்றமும் விருப்பம் தெரிவித்திருப்பதாக மாநிலக் கட்டமைப்புப் போக்குவரத்துத்துறை ஆட்சிக்குழு உறுப்பினர் ஸைரில் கிர் ஜொஹாரி தெரிவித்தார்.

மாற்றுப் பொதுப் போக்குவரத்துச் சேவையாக இந்த நீர் டாக்சி சேவை அமையும். இச்சேவை பொதுமக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையிலும் இருக்கும். இதன்மூலம் போக்குவரத்து நெரிசலுக்கும் ஒரு தீர்வு காண முடியும் என்று அவர் சொன்னார். சுற்றுலாப் பயணிகளுக்கும் அதே சமயம் நீண்ட தூரப் பயணத்திற்கும் பொதுமக்களுக்கான ஒரு கூடுதல் பொதுப் போக்குவரத்துச் சேவையாக இச்சேவை அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.



கடந்த அக்டோபர் 18ஆம் தேதி இத்திட்டத்திற்கு நிபந்தனையுடன் அங்கீகாரத்தை மாநகர் மன்றத்திற்கு போக்குவரத்து அமைச்சு வழங்கியிருக்கிறது என்று அவர் கொம்தார் கட்டடத்தில் நேற்று நடந்த நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதற்கான பரிந்துரை டிசம்பர் 18ஆம் தேதி விளம்பரம் செய்யப்படும். அடுத்தாண்டு பிப்ரவரி 27ஆம் தேதி அந்த விளம்பரம் நிறுத்தப்படும் என்று அவர் சொன்னார். எல்லா நிறுவனங்களும் இந்த நீர் டாக்சி சேவைக்கான பரிந்துரைகளை முன்வைக்கலாம்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மலேசிய நிறுவனங்கள் ஆணையத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது ஆர்ஓஎஸ் எனும் இயக்கங்கள் பதிவுத்துறையில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் கூறினார். சம்பந்தப்பட்ட அந்த நிறுவனங்கள் குறைந்தபட்ச மூலத்தனத் தொகையாக 5 லட்சம் ரிங்கிட் வைத்திருக்க வேண்டும். அதன்பிறகு நடத்தப்படும் விளக்கமளிப்புக் கூட்டங்களில் அந்த நிறுவனங்கள் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். நீர் டாக்சி சேவைத் திட்டத்திற்கான ஆய்வு அறிக்கை, படகுத்துறைகள் அமைக்கப்படும் இடங்கள், நீர் டாக்சி மாதிரிகள், நிதியமைப்பு முறை, அமலாக்கக் காலகட்டம் உள்ளிட்டவை தொடர்பான பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன என்று அவர் விவரித்தார்.

# கோலத்திரெங்கானுவில்
# இரண்டு இடங்களில் வெள்ளம்





கோலத்திரெங்கானு, டிச. 10-

திரெங்கானு மாநிலத்திலுள்ள செண்டரிங், அத்தாஸ் டோல் ஆகிய பகுதிகளில் நேற்று வெள்ளம் ஏற்பட்டதால் தற்காலிக வெள்ள நிவாரண மையம் திறக்கப்பட்டிருக்கிறது. கோலத்திரெங்கானுவில் இதுவே முதன்முறையாகத் தற்போது வெள்ள நிவாரண மையம் திறக்கப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் தொடங்கி அடைமழை பெய்ததால் அந்த 2 பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கின. இதன்காரணமாக அந்தப் பகுதிகளில் இருந்து 50 பேர் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

செண்டரிங் தேசியப் பள்ளிக்கூடத்தில் முதல் வெள்ள நிவாரண மையம் திறக்கப்பட்டிருக்கிறது. வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் இந்த மையத்தில் தற்காலிகமாக அடைக்கலம் புகுந்துள்ளனர்.

திரெங்கானு மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மழைபெய்து வருகின்றது. இதனால் வெள்ள நிவாரண மையங்களில் சேர்க்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செத்தியூ மாவட்டத்தில் உள்ள நெருஸ் ஆற்றிலும் சாலோக் ஆற்றிலும் நீர் மட்டம் உயர்ந்திருக்கிறது. உலுதிரெங்கானுவில் உள்ள தெர்சாட் ஆற்றிலும் தெலுமுங் ஆற்றிலும் நீர்மட்டம் உயர்ந்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## எதிர்க்கட்சித் தலைவரை தேசியக்
# கூட்டணி முடிவு செய்து விட்டது

கோலாலம்பூர், டிச.10-

எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதை தேசியக் கூட்டணி முடிவு செய்து விட்டதாக பாஸ் கட்சியின் துணைத் தலைவர் டத்தோஸ்ரீ துவான் இப்ராஹிம் துவான் மான் கூறினார்.

இம்மாதம் 19ஆம் தேதி நாடாளுமன்றக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பு அவரின் பெயர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

எனினும், தேசியக் கூட்டணியின் எதிர்க்கட்சித் தலைவராக யார் தேர்வு செய்யப்பபட்டுள்ளார் என்பதை அவர் வெளியிட மறுத்து விட்டார்.



எதிர்க்கட்சித் தலைவர் வேட்பாளர் பட்டியலில் பாஸ் கட்சியின் தலைவர் டான்ஸ்ரீ அப்துல் ஹாடி அவாங்கின் பெயரும் அடங்கும் என அவரின் அரசியல் செயலாளரும் பாச்சோக் நாடாளுமன்ற உறுப்பினருமான ஷாஹிர் சுலைமான் கூறினார்.

டான்ஸ்ரீ அப்துல் ஹாடி அவாங் உட்பட தேசியக் கூட்டணியின் உச்சமன்றமும் மேற்குறிப்பிட்ட அந்த நபரை எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்வு செய்ய முடிவு செய்தது என்றார்.

இதனிடையே, எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பாஸ் கட்சியின் துணைத் தலைவர் டத்தோஸ்ரீ துவான் இப்ராஹிம் துவான் மானும் பொருத்தமான ஒரு வேட்பாளர் என அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ஓர் அமைச்சராக இருந்த பரந்த அனுபவம் அவருக்கு உள்ளதால், அவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் எனவும் அவர் சொன்னார்.

